மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அது பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் இல்லை. ஆனாலும் அந்தமானிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே சென்று அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டார் என்ற செய்தியை நான் பத்திரிகையில் பார்த்ததுதான்.

திருப்பூர் ஒன்றியத்தின் கீழுள்ள மருந்தகங்கள்

* 804-வினு—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட எந்தெந்த மருந்தகங்களை அரசு 1973–74 ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நடப்பு ஆண்டில் ஒன்றும் எடுக்கப்படவில்லை.

Co-operative Rural Dispensaries

* 805 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open Co-operative Rural Dispensaries in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மருத்துவப் பட்டதாரிகளுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும், மருத்துவப் பராமரிப்புப் பணிகளில் பொது மக்களும் பங்கு கொள்ள வகை செய்யவும், அரசு, 1973–74-ஆம் ஆண்டில், இந்திய அரசின் ஐந்து லட்சம் பேர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 13 கிராமப்புற கூட்டுறவு மருந்தகங்கள் திறக்கக் கருதியுள்ளது. முன்னேடித் திட்டமாக இந்த மருந்தகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி